**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண். 67 /2026**

**வாக்குமூலம்: வா.சா.1 – முகம்மது காசிம்**

**13.08.2026: சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :**

1. எனக்கு இஸ்லாமிய முறைபடி கடந்த 20.08.2023 ஆம் தேதி திருமணம் நடைபெற்றது என்றாலும், அதற்கு ஆதரவாக வா.சா.ஆ.2 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது திருமணத்தை கடந்த 19.2.2024 ஆம் தேதியன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்து கொண்டோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் கடந்த 19.02.2024 ஆம் தேதியிட்ட திருமண பதிவுச்சான்று பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.1ன் அசல் என்னிடம் தான் உள்ளது என்றாலும் அதை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அசல் என்னிடம் இல்லை. எனது மனைவி வங்கியில் நாமினியாக சேர்ப்பதற்காக அசல் ஆவணத்தை என்னிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளார்.

2. அதற்கான அசல் என்னிடம் இல்லை என்றாலும், அதற்கான சான்று நகலைப் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றாலும், மேற்படி ஆவணத்தை மறைத்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. என்னுடைய திருமணப்பந்தத்திற்கு பயனாக கடந்த 08.08.2024 ஆம் தேதி பெண் குழந்தை பிறந்ததுள்ளது என்றாலும் குழந்தை பிறப்புச்சான்றிதழை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். என்னிடம் காட்டப்படும் குழந்தை சனா மரியன் பிறப்புச் சான்றிதழின் கணினி நகல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது திருமணத்திற்குப் பிறகு நான் வேலைக்குச் செல்லாமல் என் மனைவியை துன்புறுத்தியதால் எனக்கும் எனது மனைவிக்கும் இடையே மனக்கசப்பு ஏற்பட்டது என்றால் சரியல்ல.

3. எங்களது குடும்ப பிரச்சனை சம்பந்தமா ஜமாத் மூலமாகவும் எங்களது குடும்பத்தார் மூலமாகவும் சமரச பேச்சு வார்த்தை நடைபெற்றது என்றாலும் அதற்கு நான் ஒத்துழைக்கவில்லை என்றாலும் சரியல்ல. கடந்த 30.9.2024 ஆம் தேதியன்று எனது மனைவி என்மீதும், எனது தாயார் மீது பழனி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் புகார் மனு ரசீது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ.3 ஆன அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை

மறுத்து பிரதிவாதி அனுப்பிய பதிலறிவிப்பு வா.சா.ஆ.4 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. அந்த அறிவிப்புக்கு பின்பு நான் சமரசம் செய்ய எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை என்றால் முயற்சி எடுக்கவில்லை. அதன் பிறகு தான் பிரதிவாதி 02.06.2026 ஆம் தேதி பிரதிவாதி குலா அறிவிப்பு எனக்கு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி ஆவணம் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்களுக்குள் எந்த ஒரு கருத்து ஒற்றுமையும் ஏற்படவில்லை என்பதால் தான் பிரதிவாதி எனக்கு குலா அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றாலும், எனது மன வாழ்க்கையை மீட்டெடுப்பதற்காக எந்த ஒரு முயற்சி செய்யவில்லை என்பதால் தான் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் இடையே கொடுக்கல் வாங்கல் எதுவும் இல்லை என்றால் சரிதான். வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை : இல்லை.**

Taken down by me in open court and
read over to the witness in Tamil and
acknowledge by him/her to be correct

APOORVA S

Digitally signed by APOORVA S
Date: 2026.08.13 18:20:57 +0530

District Munsif,
Palani.